# 8 வண்ணப் பைகளில் நூல்கள்

## இலக்கு

*சின்னஞ்சிறார்கள் சிறப்பு விதமாக வியப்புகளை விரும்புவர். இக்கருத்துடன், அவர்கள் உள்ளடக்கம் பற்றி ஆர்வமடைகின்றனர், அதுவும் படிப்பதற்கான ஊக்குவிப்பை அதிகரிக்கும்.*

1ம் - 9ம் தரம் | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
பல்வேறு நூல்கள்,
அன்பளிப்பு பொதிசெய்யும் தாள்

**செயல்முறை:**

- ஆசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும் / மாணவிக்கும் வண்ண வண்ண அன்பளிப்புப் பொதி செய்யும் தாளினால் பொதி செய்யப்பட்ட ஒரு நூலை ஒரு பையினுள் வைப்பார் (பின்னர் இதனை மூத்த மாணவர்களும் செய்யலாம்). பின்னர் இவ் வண்ண வண்ணப் பைகள் கூடையொன்றினுள் வைக்கப்பட்டு வகுப்பில் முன் வைக்கப்படும். வெவ்வேறு வயதினருக்கு வெவ்வேறு நிறங்களை பயன்படுத்துவது பயனுடையதாகும். (சிவப்புப் பைகள் ஸ்ரீ சிறார்களுக்கு, நீலம்: 4ஆம் - 6ஆம் தரம், பச்சை: 7ஆம் - 9ஆம் தரம்).
- ஒவ்வொரு பிள்ளையும் ஒரு "வண்ணப் பையை" எடுத்துப் பிரித்துப் பார்க்கலாம். முதல் படித்தலுக்காக, பக்கங்களைப் புரட்ட, நூலினுள் மேய ஒவ்வொருவருக்கும் 10 மணித்துளிகள் வழங்கப்படும். பிள்ளைக்கு அது ஏற்கனவே தெரிந்த நூலாயின், அல்லது முற்றிலும் அதனை எதுவும் செய்ய முடியவில்லையெனின், அவன் / அவள் ஆசிரியர் மூலம் வேறொன்றை பரிமாற்றிக்கொள்ளலாம்.
- தொடர் முடிவில், மாணவர்கள் நூல்களை படிப்பதற்கு அல்லது வேறொருவர் தமக்குப் படித்துக்காட்டுதற்கு வீட்டுக்கு எடுத்துச்செல்வர். ஒன்று அல்லது இரண்டு கிழமைகளின் பின்னர் பள்ளிக்குத் திருப்பி ஒப்படைக்கப்படும். மாணவர்கள் தாம் படித்தவற்றை மற்றவர்களுடன் பரிமாறி, ஒப்பிட்டு, படித்தல் முன்னூட்டல் குறிப்புகளை ஒவ்வொருவருக்கும் வழங்குவர்.



**மாற்று முறைகள்:**

முறையே வண்ணப் பைகளில் அல்லது பொதிகளில் மாணவர்கள் ஏற்கனவே அறிந்த நூல்களும் இருக்கலாம் (எ.டு. ஆசிரியரால் அந்த ஆண்டில் மாணவர்களுக்குப் படித்துக்காட்டியவை, அல்லது ஏனைய மாணவர்களால் வழங்கப்பட்டவை). மாணவர்கள் தங்கள் நூலின் உள்ளடக்கத்தை துல்லியமாக மீண்டும் ஒரு தடவை தம்முள்வாங்கிக் கொண்டு (மற்றைய மாணவர்களுக்குக் காட்டிக்கொள்ளாமல்) அவற்றுக்கு விடுகதைகளை எழுதிக்கொள்வர்: பின்னர் அதை ஏனையோரிடம் வினவி நூலின் பெயரைக் கண்டுபிடிக்கச் செய்யலாம். புதிர் வினாக்களுக்கு எடுத்துக்காட்டுகள்:"எனது நூலின் முதன்மைக் கதைமாந்தரின் தந்தை ஓர் அரசனாவார்", "எனது நூலின் கதை நம்முடைய நாட்டில் 1000 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதாகும்", "எனது நூலின் முதன்மைக் கதைமாந்தர் இரு சிவப்புப் பின்னல் வாலை உடையவர்", முதலாவதாக வழங்கப்படும் தகவல் மிகப் பொதுவானதாக இருக்கவேண்டும் யாராலும் கண்டுபிடிக்க முடியாவிடில், மேலதிக தகவல்களை வழங்கலாம். (கருத்து #13 "துணுக்குத் திரள்" ஐயும் பார்க்க).